
விதியும் மதியும் !



சுவாமி பிரபஞ்சநாதன்

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	விதியும் மதியும்!
ஆசிரியர்	:	சுவாமி பிரபஞ்சநாதன்
மொழி	:	தமிழ்
வகை	:	விழிப்புணர்வு
முதற்பதிப்பு	:	*2023*
பக்கங்கள்	:	*24*
தாள்	:	*A5 (5.83" X 8.27")*
எழுத்து அளவு	:	*14* புள்ளிகள்
உரிமை	:	அனைவருக்கும்
கட்டமைப்பு	:	சாதா பைண்டு அட்டை
கணினி அச்சு	:	ஓம் கிராபிக்ஸ்
விலை	:	அக விழிப்பு

விதியும்!

மதியும்!



சுவாமி பிரபஞ்சநாதன்

விதியும்! மதியும்!

அன்றைய காலம்முதல், இன்றைய காலம் வரை ஒவ்வொரு சாமானிய மனிதனும், சிந்தனையாளனும், அறிவியல் அறிஞனும், மதபோதகனும் என எல்லோருமே விவாதம் செய்யக்கூடிய ஒரு விசயம் உண்டென்றால், அது "**விதியா? மதியா?**" என்பதில் இருக்கின்றது.

இவர்கள் எல்லோருமே '**விதியை மதியால் வெல்ல முடியுமா?**' என்ற கேள்வி மட்டுமே முன் வைக்கின்றனர். அதற்குக்காரணம், தனக்கு விதிக்கப்பட்ட விதியை மீறிய வாழ்க்கையை வாழவே ஒவ்வொருவரும் ஆசைப்படுகின்றனர்.

பொதுவாகவே, மனிதனிடம் மட்டுமல்ல அனைத்து சீவராசிகளிடம் உள்ள மகத்தான ஒரு விசயம் எது என்றால், அது "**மனம்**" என்ற ஒன்றுதான்.

இந்த மனம் மிகவும் சுதந்திரம் வாய்ந்தது. தன் போக்கில் தானாய் இருக்கக்கூடிய அதிக சக்தி கொண்டது. அதனால்தான் படைக்கப்பட்ட அனைத்து சீவராசிகளும் அதனதன் இஷ்டப்படி இருக்க ஆசைப்படுகின்றது.

அதிலே, மனிதன் மட்டும் விதிவிலக்கல்ல. அத்துடன், மனிதனிடம் காணப்படுகின்ற மனதின் மேம்பட்ட சக்தியாகிய "**பகுத்தறிவு**" என்பது நன்மை, தீமைகளை பகுத்து அறியக்கூடிய வல்லமை கொண்டதினால், அவன் மட்டுமே அனைத்தையும் அடக்கி ஆளும் திறன் உள்ளவனாக இருக்கின்றான்.

அதிலே, அவனையும் மீறி அந்த மனம் அதன் போக்கில் அவனை அழைத்துச் செல்வதை அறிந்து ஆச்சரியம் அடைகின்றான். அத்துடன் அதிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக இருக்கவும் விரும்புகின்றான். அந்த நிலையிலே அவனுக்கு விரும்பாத பல நிகழ்வுகள் அவனது வாழ்க்கையில் வருவதை "**விதி**" என்று ஏற்பதினால், அந்த விதியை தன்னுடைய மதியால் வெல்ல முடியுமா? என ஆராய்கின்றான்.

இதிலே, பலரும் பலவிதமான கருத்துக்களை முன் வைக்கின்றார்கள். அதிலே ஒரு சாரர் '**விதிப்படிதான் வாழ்க்கை**' என்றும், மற்றொரு சாரர் '**மதிப்படிதான் வாழ்க்கை உள்ளது. விதியும் கிடையாது, ஒரு மண்ணும் கிடையாது.**

சோம்பேறிகளின் சௌகரியமான தப்பித்தல்தான் விதி' என்றும் கூறுகின்றார்கள். இதிலே, இன்னும் சிலரோ '**முயற்சியும் இருக்கனும். அது பலனளிக்க நல்ல விதியும் இருக்கனும்**' என்றும் கூறுகின்றார்கள்.

இந்த விதியையும், மதியையும் பற்றி பேசாதவர்களே இல்லை என்று கூறலாம். ஏனெனில், விதியின் வல்லமை மதியின் வசமா? அல்லது மதியின் வல்லமை விதியின் வசமா? என்பதை அறிய எல்லோருக்குமே ஆசை இருக்கின்றது.

ஆக, அவரவர் அனுபவங்கள் அவர்களை எவ்வாறு சிந்திக்கவைக்கிறது என்று பார்த்தோமானால், '**விதிச்சதுதான் நடக்கும். விதிக்காதது நடக்காது**' என்று தீர்மானமாகக் கூறுகிறார் பகவான் ஸ்ரீரமண மகரிஷி.

'**விதியை மதியால் வெல்ல முடியாது**'. ஜென்மத்தில் குரு இருந்ததால், ராமர் வனவாசம் போனார். பத்தில் குரு வந்ததால், பரமசிவனும் பிச்சையெடுத்தார். அப்படிப்பட்ட அவதாரப் புருஷர்களுக்கே அந்த நிலையென்றால், நாம் எம்மாத்திரம்?' என்கின்றனர் சோதிட சாஸ்திர வல்லுநர்கள்.

'உங்களிடமிருந்து எடுக்கப்பட வேண்டியவைகளும், உங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியவைகளும் என்றோ நிச்சயிக்கப்பட்டுவிட்டன' என்கிறது, கிறிஸ்துவத்தின் புனித நூலான பைபிள்.

இந்த உலகில், *'இறைவன் கொடுத்ததை எவராலும் பறிக்க முடியாது; இறைவன் மறுத்ததை எவராலும் கொடுக்க முடியாது'* என்கிறது இஸ்லாம்.

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் தன்னை அரசன் என்று கூறிய சோதிடம் பொய் எனக்கூறி, தன் அண்ணன் செங்குட்டுவனை அரசனாக அரியணையில் அமர்த்துகிறார். இது விதிக்கப்பட்ட நிகழ்வுக்கு வேறாக மாற்றப்பட்டது என்பதினால், இதுப்போன்று பலரும் பலவாறான கருத்துக்களை முன்வைத்தாலும், பெரும்பாலானவர்களின் நோக்கம் **விதியை மதியால் வெல்ல முடியுமா?** என்பதில்தான் இருக்கின்றது.

ஏன் அவ்வாறு எண்ணுகின்றார்கள்? என்றால், அவரவர்களுடைய தற்போதைய வாழ்க்கையின் விதியை தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளத்தான் அனைவருமே ஆசைப்படுகின்றார்கள்.

அதற்காகத்தான் அனைவரும் சோதிடர்களை நாடுகின்றார்கள். அந்த சோதிட சாஸ்திரங்களில் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள். தங்கள் எதிர்காலத்தை அறிய ஆவல் கொள்கின்றார்கள். அதன் மூலமாக தங்களது எதிர்காலத்தை தெரிந்துக் கொண்டு, தன்னுடைய தற்போதைய இந்த சூழலில் இருந்து சற்றே மாற்றம் ஏற்படுத்திக் கொள்ள முடியுமா? என்று எண்ணுகின்றார்கள்.

அதன்காரணமாக, இவர்கள் **வேத சோதிடம், கைரேகை, நாடி சாஸ்திரம், பக்ஷி சாஸ்திரம், மந்திரம், மாந்திரீகம்** போன்ற பலவாறான பாதைகளில் பயணிக்க ஆசை கொள்கின்றனர்.

அதேசமயம், இவர்கள் தங்களின் இத்தகைய ஆசைகளை தூண்டும் மனதைப் பற்றி மட்டும் அறிய ஆர்வம் காட்ட மறுக்கின்றார்கள். ஏனெனில், இவர்கள் தேடும் பொருள் எதுவாக இருப்பினும், அது இவர்களிடமே இருக்கின்றது என்பதை ஏற்க மறுக்கின்றார்கள்.

பொதுவாக, இந்த **விதி** மற்றும் **மதி** குறித்து விவாதிப்பதற்குரிய விசயங்களுக்கான அடிப்படை அஸ்திவாரமே நம்மிடம் உள்ள "**மனம்**"தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஒருவன் தன் மனதை அணுகுவதற்குரிய, அரிய பல பாதைகள் பலவாறாக இருப்பினும், அதிலே மிகவும் முக்கியமான ஒரு பாதையும் உள்ளது.

அது, அறிவுப்பூர்வமான அணுகுமுறையைக் கொண்ட ஆன்மவியல் பாதை என்றால், அது மிகையாகாது. காரணம், ஒருவன் தன்னை தான் அறியாமல், இந்தத் தரணியில் எதையும் அறிய முடியாது. "**எதை அறிந்துக் கொண்டால், எல்லாம் அறிந்ததாகுமோ, அதை அறிவதே அறிவு**" என்று ஒருவன் தன்னைத்தான் அறிய மேற்கொள்ளும் மனதின் மகத்தான விசாரமே, அவனுடைய விவேகம் என்று கூறப்படுகின்றது.

அதைவிடுத்து, அனேக வழிகளில் அனைத்தையும் ஆராய முயற்சிப்பவன் இத்தகைய **விதி - மதி** விசயங்களை குறித்த கருத்தாக்கமும், பாதிப்பும், தன்னுடைய தனி மனித தளத்திலும், மற்றவர்களின் ஒட்டுமொத்த சமூக தளத்திலும் பல்வேறுவிதமான தாக்கங்களை ஏற்படுத்த வல்லது என்பதையும் அறிந்துக் கொள்ள ஆர்வம் காட்ட வேண்டும்.

பொதுவாக, இன்றைய மனிதர்களிடத்திலே "**விதி**" குறித்து பல வித புரிதல்களும், விளக்கங்களும் இருந்தாலும், அதை அவர்கள் இயற்கையின் '**சட்டம்**' அல்லது "**விதி**" என்று எடுத்துக்கொண்டாலும், அது அவரவர்களுக்கே உரித்தான முன்வினைப்பயன் (**காரண - விளைவு** என்ற பொருளில்) என்பதை மறந்து விடக்கூடாது. ஆகவே, அதிலிருந்து எந்த ஒரு தனி மனிதனும் தப்பிக்க இயலாது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதுவும் குறிப்பாக, **மதம்** அல்லது **இறை நம்பிக்கையை** ஊன்று கோலாகக்கொண்ட பெரும்பாலான மனிதர்களின் மத்தியில், அவர்களது வாழ்க்கையின் அடிப்படை தத்துவமாக இந்த '**விதி**' குறித்த ஆழமான மற்றும் உறுதியான கருத்துகள் அவசியம் காணப்படுகின்றன.

ஆனால், வாழும் உயிரினங்களில் மனிதன் உட்பட அவைகளின் வாழ்க்கையில் நிகழும் பல்வேறு சம்பவங்கள் எல்லாம் அவைகளின் '**விதி**' என்று ஒற்றை வார்த்தையில் ஒதுக்கிவிட்டு, அதை அடுத்தவர்கள் அல்லது அடுத்தவற்றின்மீது போட்டுவிட்டு தப்பித்துக் கொள்ளும் தரமற்ற செயலை தன்னை அறிந்தவர்கள் ஒரு நாளும் செய்ய மாட்டார்கள்.

ஆகவே, தனிமனித தளத்தில், தன் கட்டுப்பாடுக்குள் அடங்காத, விவரிக்க முடியாத விளவுகளை '**அதிர்ஷ்டம்**', அல்லது '**விதி**' என்று கூறிவிட்டு, வீணாக தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள மாட்டார்கள்.

உளவியல் நோக்கில், மனதை "**சமாளிக்கும் திறன்**" அல்லது "**தேற்றிக் கொள்ளும் முறை**" என்று இந்த விதியை எடுத்துக் கொண்டாலும், நன்றாகச் சிந்தித்து செயலாற்றும் நிலையில் உள்ள மனிதனைப்பார்க்கையில், அவனிடம் தன்னம்பிக்கை மட்டுமின்றி, தன்னையறிந்த தனித்துவத்தையும் காணலாம்.

அதுவே, தன்னம்பிக்கையின்றி, தன் மூலமாக எந்த ஒரு நல்வினை காரியத்தையும் செய்யாமல், எல்லாம் தன் விதிவிட்ட வழி! என்று இருப்பவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்ட ஏமாளிகளில் ஒருவன் என்றும் கூறலாம். இவர்களைப் போன்றவர்களுக்கு இந்த மனித வாழ்க்கை என்பது பயனற்ற வகையிலேதான் இருக்கின்றது. இவர்களுக்கும், மற்ற ஐந்தறிவு கொண்ட சீவர்களுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை என்றே கூறலாம்.

மேலும், இவர்களைப் போன்ற அஞ்ஞானிகளுக்கு அந்த வள்ளுவனின் வார்த்தையாகிய "**முயற்சி திருவினையாக்கும்**" என்பது பயன்படாமல் போகின்றது.

அத்துடன், "**வல்லவன் வெல்வான்**" என்பதற்கு ஏற்ப, இவர்களுடைய விதி, மற்றவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட அவர்களது அறிவுக்கு ஆட்பட்ட அதீத சக்திகளின் வினையாகவோ, பகடை ஆட்டமாகவோ மாறிவிடுகின்றது.

ஆக, ஒருவனுடைய அறியாமை, அடுத்தவனுடைய அறிவில் ஆளப்படுகின்றது. அதாவது, இவனது விதி அடுத்தவனுடைய மதியாக மாறிவிடுகின்றது.

இதிலிருந்து என்ன தெரிகின்றது? என்றால், பொதுவான பொருளாதார சித்தாந்தங்களிலும், பொருளீட்டுவதில், அதில் வெற்றி காணுவதிலும் ஆர்வமுள்ள அனைவரும், அடுத்தவர்களின் விதியை தீர்மானிக்கும் அதிகாரம் கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

அதனால்தான், ஆங்கிலேயர்கள் போன்ற அனேக அயல் தேசத்தவர்கள் நம்மை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தார்கள் என்றும் அறியலாம்.

ஆக, "**தீதும், நன்றும் பிறர் தர வாரா**!" என்பதுப்போன்று, ஒருவனுக்கு வருகின்ற நன்மைகள், தீமைகள் போன்ற இருமைகள் எல்லாமே, அவனால் மட்டுமே அவனுக்கு உண்டாக்கப்பட்டது என்று கூறலாம்.

ஒருவன் அடைந்த "**சுய வெற்றிகள், பலன்கள்**" அவனது செயல் விளைவுகளால் விளைந்தவை என்பதுப்போன்று, அவனுக்கு உண்டாகும் **நல்வினைகள்** மற்றும் **தீவினைகள்** என்பதும், ஏற்கனவே அவனால் உண்டாக்கப்பட்ட செயல் விளைவுகளின் **தற்போதைய நிகழ்வு** என்று அறியப்பட வேண்டும்.

அதைத்தான் அன்றைய அறிஞர் பெருமக்கள் "**வினை விதைத்தவன் வினை அறுப்பான்**!, **விதை விதைத்தவன் விதை அறுப்பான்**!" என்று கூறி வைத்தனர்.

அதாவது, *'விதியை வெல்ல வேறொரு வழியை எண்ணி நாம் செயற்பட்டாலும், அந்த வழியிலேயோ, அல்லது வேறு ஒரு வழியிலேயோ அது மீண்டும் நம்முன் வந்து நிற்கும்'.*

நம் தெய்வப்புலவர் திருவள்ளுவரும்,

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்' என்கிறார்.

அதாவது, விதியை விட, வேறு எவை வலிமையானவை?' என்கிறார் வள்ளுவர்.

''**வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி**
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது'' என்றும் கூறுகிறார்.

அதாவது, கோடிப்பொருள் சேர்ந்திருந்தாலும், இறைவன் விதித்த விதிப்படிதான் நாம் அதை அனுபவிக்க முடியுமே தவிர, நம் விருப்பப்படி அனுபவிப்பது கடினம் என்பது இதன் பொருள்.

விதியும், மதியும், உடலும் உயிருமாகச் செயல்படுகின்றன. **விதி வழியே மதி** செல்கிறது.

சரி... விதிப்படிதான் வாழ்க்கை என்றால் முயற்சிகள் எதற்கு?

மதிப்படிதான் வாழ்க்கை என்றால் கடவுள் எதற்கு?

இவைகள் நமக்கு வருகின்ற நியாயமான கேள்விகள்தான்.

இதற்கெல்லாம் **பகவான் ஸ்ரீகிருஷ்ணர்**, மகாபாரதத்தில் விடை கூறுகிறார்.

பாரதப்போர் முடிந்த பிறகு, ஶ்ரீகிருஷ்ணரைச் சந்திக்கும் அவரின் பால்ய நண்பரான உத்தவன், தனக்கு எழுந்த சந்தேகங்களைக் கேட்கிறார். அதுவே, **'உத்தவ கீதை'** எனத் தனியாகவே தொகுக்கப்பட்டுள்ளது.

அதில்...

உத்தவன்: *“சூதாட்டத்தின்போது தர்மருக்கு நீங்கள் ஏன் உதவவில்லை?”*

ஸ்ரீகிருஷ்ணன்: *“தனக்குப் பதிலாக தன் மாமா சகுனி விளையாடுவார் என்று கூறினானே துரியோதன்... அந்த விவேகம் ஏன் தர்மரிடம் இல்லை?”*

உத்தவன்: *“ஆனாலும், தர்மர் உன் பக்தன் அல்லவா? அவருக்கு உதவ வேண்டியது உங்கள் கடமை அல்லவா?”*

ஸ்ரீகிருஷ்ணன்: *“பக்தனா விவேகியா என்றால், பக்தனைவிட விவேகிக்குதான் முன்னுரிமை கொடுப்பேன்!”*

ஆகவே, **உங்களின் அனுபவ அறிவாலும், கல்வி கேள்விகளில் சிறந்தவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்ட பாடங்களாலும் கிடைத்த ஞானத்தைக்கொண்டு, உங்கள் மதி சொல்கிறபடி வாழ்க்கையை நடத்துவதே சிறந்தது.**

மதியால் விதியை வெல்ல முடியுமோ, முடியாதோ...? ஆனால், எப்பேர்ப்பட்ட விதியையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் சாதுர்யம் நம்முடைய மதிக்கு உண்டு.

பௌருஷ மஹிமா (மனித முயற்சியின் மஹிமை)

பௌருஷேன சர்வமாஸாத்யதே (முயற்சியினால் அனைத்தும் கிடைக்கும்).

எதையும் எப்போது வேண்டுமானாலும் அடைய மனித முயற்சியே தேவை. போதுமான முயற்சி செய்த பின்னர் ஒருவன் அடைய விரும்புவதை அடைகிறான்.

கர்மா, தைவம் (விதி) என்று இரண்டையும் கூறுகிறார்களே!

கர்மம் என்பது ஒருவனின் முந்தைய செயல்களைக் குறிப்பதே ஆகும்! ஆனால், ஒருவனின் தற்போதைய முயற்சி முன்னால் செய்ததை மீறிச் செயல்படும்.

தைவம். அதாவது விதி என்பது, அறியாதவர்களுடைய மனக் கற்பனையே. பார்க்க முடியாத ஒன்று அது. **விதி என்பதே இல்லை!**

தைவம் ந வித்யதே | (தைவம் - விதி என்று ஒன்று இல்லை)

தைவமஸத்ஸதா | (விதி என்பது இல்லாத ஒன்று)

தைவம் ந கிஞ்சித்குருதே கேவலம் கல்பனேத்ருஷி | (விதி ஒன்றையும் செய்வதில்லை. கற்பனையே அதைச் செய்கிறது - **யோகவாசிஷ்டம்**).

ஒருவன் ஒரு ஞானியிடம் சென்று கேட்டான்.

*"மனித வாழ்க்கையில் எல்லாவற்றையும் தீர்மானிப்பது அவன் **விதியா?,** இல்லை! அவன் **மதியா?**".*

ஒரு ஞானி கூறினார்.

"**ஒரு காலை உயர்த்தி மறு காலால் நில்**" கேள்வி கேட்டவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனாலும், தனது இடது காலை உயர்த்திக்கொண்டு, தனது வலது காலால் நின்றான்.

இப்போது, ஞானி மீண்டும் கூறினார்.

"**சரி அந்த இன்னொரு காலையும் உயர்த்து**".

அவனுக்குக் கோபம் வந்து விட்டது. "**இது என்ன சின்ன பிள்ளைத்தனமாக இருக்கு**" என்று சீறினான்.

பிறகு, சுதாகரித்துக் கொண்டவன் "**இரண்டு காலையும் உயர்த்தி எப்படி ஐயா நிற்பது**?" என்றான்.

ஞானி அமைதியாகக் கூறினார்.

"நான் காலைத் தூக்கச் சொன்னபோது எந்தக் காலைத்தூக்குவது என்று தீர்மானம் செய்தது உன் மதி. அத்துடன், மறு காலையும் ஒருசேரத் தூக்கி நிற்க முடியாது என்பது விதிக்கப்பட்ட விதி".

பாதியை உன் மதி தீர்மானிக்கிறது. மீதியை உன் விதி தீர்மானிக்கிறது என்றார்.

அந்த ஞானியின் வார்த்தைகளில் சூட்சுமமான இன்னொரு உண்மையும் ஒளிந்துக்கொண்டிருக்கின்றது. அது, '**விதி என்பது, முன்பு நாம் மதி கொண்டு தீர்மானித்ததன் பின் விளைவு**' என்பதாகவே பெரும்பாலான நேரங்களில் இருக்கின்றது.

ஆகவே, விதி நமக்குத் தருவதை அப்படியே ஏற்றுக்கொண்டு முடங்கிக் கிடக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அதையே மூலதனமாக எடுத்துக்கொண்டு மதியால் எத்தனையோ செய்ய முடியும். கால நேர சூழ்நிலைகளைக் கணக்கில் கொண்டு, மதி கொண்டு உழைத்தால் அந்த விதியும் வளைந்து கொடுக்கும்.

எனவே, விதி மிக சக்தி வாய்ந்ததாக இருக்கலாம். ஆனால், **விதி** மட்டுமே ஒருவனது வாழ்க்கையைத் தீர்மானித்து விடுவதில்லை என்பது **மதி** படைத்த மனிதர்களுக்கு மட்டுமே புரியும்.

ஆக, கர்மத்தால் கட்டுண்டவன்தான் மனிதன் என்று கூறும்போதே, அவன் நல்ல கர்மங்களைச் செய்து, தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றே வேதத்தின் முற்பகுதியான **கர்மகாண்டம்** அறிவுறுத்துகின்றது.

அதாவது, வேதம் கூறும் மிக உன்னத வாக்கியம் என்பது, **விதி உன்னை விடாது என்று கூறும்போதே, அந்த விதியை உருவாக்குபவன் நீயே!** என்று ஆணித்தரமாக கூறுகின்றது.

அதாவது, உனக்கு முன்னேற வாய்ப்புகள் உண்டு. ஆகவே, உடனடியாக உன் முன்னேற்றத்தை நோக்கி முதல் அடியை எடுத்து வை.

நான் உன்னை நூறு அடிகள் முன்னேற்றுவேன் என்ற ஆறுதலான அவதாரங்களின் வாக்கியத்தை அது நமக்கு முன் வைக்கிறது.

பிறப்பு ஒன்றே ஒன்றுதான் என்றால், மனிதனுக்கு மனிதன் பிறப்பதில் ஏன் இத்தகைய வேறுபாடுகள்?

அது போகட்டும். பிறந்து ஒரேநாளில் இறக்கும் ஒரு குழந்தைக்கும், நூறு ஆண்டுகள் வாழ்ந்து முடித்து, பல நல்லது, கெட்டது செய்தவனுக்கும் இயற்கையின் இறைவனாகிய காலதேவன் எப்படி சமமான தீர்ப்பு கொடுக்க முடியும்?

அதுவும், ஒரே ஒருநாள் வாழ்ந்து மறைந்த அந்தக் குழந்தைக்கு, காலன் தீர்ப்பு வழங்கும் நாளுக்காக, அது ஏன் எல்லையற்ற காலங்கள் காத்திருக்க வேண்டும்...?

இறைவனின் நீதி இதுதான்! என்பதை ஏற்காத பலருடைய மனம் இதனால் சலிப்படைகிறது.

அதனால், மனிதனை மனம் போனபடி போகச் செய்கின்றது. நடப்பது நடக்கட்டும் என்பது அவனது வாழ்க்கை முறையாகிறது. அதனால்தான் மேலை நாடுகளில் உள்ளவர்கள் அவர்கள் மனம் போனபடி வாழ்கின்றார்கள்.

ஆனால், நாம் அனைவரும் நம் ரிஷிகள் வகுத்துக் கொடுத்த வழியில் வாழ்வதால், விவேகத்துடன் ஒவ்வொரு காரியத்தையும் விபரமாகச் செய்து வருகின்றோம். காரணம், கர்மவினைகளுக்கு நாம் கட்டுப்படுகின்றோம்.

அவ்வாறு நாம் செய்யும் செயல்கள் அனைத்துமே நமக்கு ஏன் வெற்றி கொடுப்பதில்லை?

இதற்கான பதிலை, ஸ்ரீராமருக்கு பகவான் வசிஷ்டர் பின்வருமாறு விளக்குகிறார்.

"வெற்றி என்பது உழைப்பை மட்டும் கொண்டு வருவதில்லை. காலம், வெளி என்ற இரண்டு காரணிகளுடன் இணைந்தே வருகின்றது".

இதில், பலன்கள் என்பது, எது?

இதில் எது வலிமையானதோ அதைக்கொண்டு பலன் அமைகிறது!

இதில், காலம் இருப்பதினால், சில சமயம் உடனடி பலன் கிடைக்கிறது. சில சமயம் சில காலங்கள் கழித்துக் கிடைக்கிறது. ஆனால், பலன்கள் விளையும் என்பதில் சந்தேகமில்லை.

(ஓ, ராமா!) உடனடியாக நடந்ததற்கும், தாமதமாக ஆனதற்கும், முட்டாள்கள் விதியைக் காரணம் காட்டுகின்றனர். ஆனால், கர்மத்தின் ஆதிக்கத்தை எடுத்துக் கொண்டாயானால், அந்த கர்மங்கள் இரண்டு வகைப்படும்.

ஒன்று **ப்ரக்தனா** (பழையது), மற்றொன்று **இஹரிகா** (தற்போது நடப்பில் உள்ளது). இதில், தற்போதைய கர்மம் பழையதை வெல்லும் ஆற்றல் கொண்டது.

இரண்டும் இரண்டு செம்மறி ஆடுகளைப் போலச் சண்டையிடும். இதில், வலியது மட்டுமே மற்றொன்றை வெல்லும்! ஆகவே, தற்போது வலுவுள்ளவனாக ஆவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆகவே, கடந்த காலம் நிச்சயமாக தற்போதுள்ள நிகழ்காலத்தை விட வலுவுள்ளதாக இருக்க முடியாது. நேற்று சாப்பிட்டதால் வயிற்றில் ஏற்பட்ட அஜீர்ணத்தை இன்று மருந்து சாப்பிட்டுக் குணப்படுத்துவதில்லையா?

அதுப்போல, ஒருவன் ஏழ்மையாக இருந்தாலும் சரி!, பல இன்னல்கள், தடைகள் அவனுக்கு இருந்தாலும் சரி!, அதில், எவன் ஒருவன் அவற்றையும் மீறித் தன்முயற்சிகள் மூலம் அவற்றை வெல்கிறானோ அவனே பாராட்டத் தகுந்தவன்!

வசிஷ்டரின் இந்த உபதேசம் நலிந்தோர்க்கு நம்பிக்கை ஊட்டுகின்றது. ஆக, "**கடந்த காலத்தை மீறி நிகழ்காலத்தில் வலிமையுடன் பாடுபடு**!" என்பதே வசிஷ்டரின் உபதேசம் ஆகும்.

ஆக, இதிலிருந்து **யோகவாசிஷ்டம்** கூறவருவது என்னவெனில், நமது முந்தைய முயற்சிகளே (செயல்களே) **விதி** எனப்படுகிறது. நமது முந்தைய செயல்களின் விளைவு தவிர வேறு விதி என்று ஒன்றும் கிடையாது.

நமது முயற்சியை வைத்தே, நமது சாதனைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே, நமது முயற்சியே **விதி** ஆகும்.

நமது முந்தைய முயற்சிகளும் இப்போதைய முயற்சிகளும் ஒருவேளை ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தால் - வேறாக இருந்தால் - இரு காளைகள் ஒன்றுக்கொன்று சண்டைப்போடுவது போல இருப்பின், அந்த இரண்டில் எது மிக்க சக்தி வாய்ந்ததாக இருக்கிறதோ? அதுவே வெல்லும்.

இந்த உண்மையைத்தான் "**தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும்**" என்று கூறப்படுகின்றது.

ஆகவே, கடந்த காலமோ நிகழ்காலமோ, செய்யப்படும் முயற்சிகளில் எது வலியதோ? அதுவெ வெல்லும்.

மனிதன் தனது விதியைத் தன் எண்ணங்களால், தானே நிர்ணயிக்கிறான். விதியின்படி நடக்க முடியாமல் இருப்பதைக்கூட அவன் நடக்கச் செய்வான். அந்த அளவுக்கு அவன் தன் மனதால் வலிமையானவன்.

ஆகவே, ஒருவன் தனது பழைய கால முயற்சியால் ஏற்படவிருக்கும் கெட்ட விதியைக்கூட இப்போதைய, அதிக மன வலிமைப் பொருந்திய மதியின் முயற்சியால் மாற்ற முடியும்.

நல்ல விதமான முயற்சிகளால் இந்த உலகில் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை.

ஆக, **விதி என்பது எழுதப்படுவது அல்ல, ஏற்படுத்திக்கொள்வது** என்பதே நிதர்சனமான உண்மை.

“**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி**
தாழாது உஞற்று பவர்”.

விதியை வெல்லமுடியுமா? முடியும் என்று திருவள்ளுவர் தமது இந்தக் குறளில் எடுத்துக் கூறுகின்றார்.

நீங்கள் செய்து முடிக்க நினைத்த செயலில் தோல்வி வந்துவிட்டதா? விதியே என்று இருந்து விடாதீர்கள். விதியை வெல்வதற்கு, சோர்ந்திருக்காது விரைந்தெழுந்து, தொடர்ந்து செயற்படுங்கள்.

உங்கள் செயற்திறனால் விடாமுயற்சியால், நீங்கள் செய்து முடிக்க நினைத்ததை முடித்து, விதியை வென்று காட்டலாம்.

மனிதர்கள் அறிவற்ற சடப்பொருட்கள் அல்ல. அவர்களுக்கு நன்மை, தீமைகளைப் பகுத்தறியக்கூடிய **பகுத்தறிவு** இருக்கிறது. மனிதர்கள் தம் விடாமுயற்சியால் ஊழையும் அதாவது, விதியையும் வெற்றி கொள்ளமுடியும். இது நம் தலைவிதி என்று செயற்படாதிருக்கக் கூடாது என்கிறார்.

ஆனால், அந்த செயலின் பலா பலன்களை தன்னுடையது என்று மட்டும் எண்ணக் கூடாது. **கடமையை செய்! பலனை எதிர்ப்பார்க்காதே!** என்று இதைத்தான் கூறப்படுகின்றது.

பொதுவாக, தோல்வியடைந்த மனிதர்களை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், அவர்களிடம் மூன்று குணாதிசயங்கள் இருப்பதைக் கண்டிப்பாக காண முடியும்.

அதில் **முதலாவது, சாதனை புரிந்தே தீர வேண்டும் என்ற ஒரு வெறி** உத்வேகமாக அவர்களிடம் இருப்பதில்லை. இந்த வெறி இல்லாதவர்களிடம் எத்தனை திறமை இருந்தாலும் அவர்கள் பிரகாசிப்பதில்லை.

இரண்டாவது அவர்களது செயல்பாடுகள் சீராகவும், தொடர்ச்சியாகவும் ஒரே விசயத்தில் இருப்பதில்லை. காரணம், இன்று ஒன்றில் ஆர்வமாக இருப்பவர்கள், நாளை வேறொன்றில் தீவிர ஈடுபாடு காட்டுவார்கள். சில நாட்களில் மீண்டும் புதிதாக வேறொன்றின் மீது ஆர்வம் வந்து, தனது வெற்றி நோக்கத்தை மாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

மூன்றாவது அவர்கள் வெற்றிகள் வரும்வரை பொறுமையாக தாக்குப்பிடித்து நிற்பதில்லை. தற்காலிகத் தோல்விகளுக்கு பயந்து பின்வாங்கி விடுவார்கள். தற்காலிக தடங்கல்களும், நிராகரிப்புகளும், தோல்விகளும் முயற்சிகளைக் கைவிட அவர்களுக்கு போதுமானவையாக இருக்கும்.

இந்த மூன்று தவறுகளையும் வெற்றியாளர்கள் செய்வதில்லை என்பதை பல வெற்றியாளர்களின் வாழ்க்கை அனுபவங்களில் இருந்து நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே, எத்தகைய திறமையாளர்களுக்கும் உடனடியாக வெற்றிகள் வந்து விடாது. அவர்களது வெற்றிப் பயணத்தின்போது பல்வேறு தடங்கல்கள், தோல்விகள் சகஜம் என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, முழுமையான ஈடுபாடுடன், எடுத்த காரியத்தில் கண்ணாக இருப்பவர்களே இறுதியில் வெற்றி பெறுகிறார்கள்.

பொதுவாக, தனிமனிதர்களைப் பொறுத்தவரையிலும் **உடல், மரபணு, பிறப்பு, வாழும் சூழல்,** ஆகிய பல்வேறு விசயங்கள் அவனுக்கு முன்பே நிர்ணயிக்கப்பட்டது என்று கூறுவதில்தான், இந்த “**விதி வழியது!**” என்று சிலர் வாதிடுகின்றனர்.

ஆனால், அவ்வாறு, அமையப் பெற்றவைகளையும் மீறி, மனிதன் தன் பயணத்தை தானே தேர்ந்தெடுத்துக்கொள்ள அவனிடம் பிரத்யேக **பகுத்தறிவு** உள்ளது என்பதை அவன் மறந்து விடக்கூடாது.

பொதுவாக, மனிதன் தன் சக்திக்கு அப்பாற்பட்ட விசயங்களான விவேகமற்ற காரியங்களில் ஈடுபட்டுவிட்டு, அதை விதியின் மீது சுமத்துவது என்பது ஏற்புடையதாகாது.

உதாரணமாக, வேகமாக ஓடும் நீரோட்ட வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடுவது. மனித சக்திக்கு அப்பாற்பட்ட அனேக ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுவிட்டு, அதற்கான தீர்வுகளை மற்ற தளங்களில் தேடுவது. இயற்கைக்கு புறம்பாக புதிய அமைப்புகளை உருவாக முயல்வது போன்றவைகள் ஒரு பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே இருக்குமே ஒழிய, மகத்தான சாதனைகள் என்று அவைகளைக் கூறிவிட முடியாது.

ஒவ்வொரு தனி மனிதனும், அதுவும் **சித்தன்** முதல் **புத்தன்** வரை எல்லோருமே ஒரு விசயத்தை நோக்கி விடைக் காண முயன்றனர். அதுவே, மனிதனிடம் உள்ள மகத்தான "**மனம்**" என்ற சக்தியை மடைமாற்றக் கற்றுக் கொண்டனர்.

அதிலே, அறியாமைகள் நிறைந்த வாழ்க்கை என்பது, உயிரினங்களின் ஆரம்ப கட்டத்தில் உண்டான பல்வேறு பரிணாம வளர்ச்சியில், சிக்கல்கள் நிறைந்த சில காரணிகளைக் கடந்து, ஒரு அறிவு தொடங்கி ஆறு அறிவு வரை வளர்ந்த நிலையில், மனிதனிடம் மட்டுமே மகத்தான "**மனம்**" பகுத்தறிவு பெற்றிருப்பதினால், அதன் வாயிலாக அவன் அனைத்து இலக்குகளையும் எளிதாக அடைய முடியும் என்கின்றது

அதன் வாயிலாக, இயற்கை விதிகளை வெல்லக்கூடிய விளைவுகளாக எதிர் வினைகள், புரட்சிகர முயற்சிகள், கூட்டு முயற்சிகள், சமுதாய தளத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், அறிவியல் அணுகு முறைகள் என ஏராளமான விசயங்கள், விவேகமுள்ள மனித இனத்தின் மொத்த பரிணாம வளர்ச்சியில் பல்வேறு புதிய வழிகளை உண்டாக்கியுள்ளன என்பதையும் எவராலும் மறுக்க முடியாது.

உதாரணமாக, அணு ஆயுதங்களை வைத்திருக்கும் ஒரு நாட்டின் அதிபர், மற்றொரு நாட்டில் வாழும், ஏன்?, இந்த உலகத்தின் வாழும் பெரும்பாலான உயிர்களின் விதியை ஒரு நொடியில் முடித்து விடக்கூடும்.

ஒரு நாட்டினுடைய அதீத கட்டற்ற வளர்ச்சி கூட, மற்ற நாடுகளுக்கும், சமூகங்களுக்கும் நேரடியாகவோ, அல்லது மற்ற வகையிலோ பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடும்.

நாடுகளுக்கு இடையினாலான போர்களினாலும், பொருளாதார கட்டுப்பாடுகளினாலும் எத்தனையோ மனித உயிர்கள் மடிந்து விடுவதை "**விதி**" என்று வெறும் வார்த்தையினால் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

அதாவது, மனிதனின் ஆசைகளினால் உண்டான இத்தகைய அழிவு சக்திகளை அவன் **விதி** என்று புறம் தள்ள முடியாது. விவேகத்துடன் அணுகினால், விளைவுகளை நன்மையாகக் கூட மாற்ற முடியும்.

பொதுவாக, தனக்காக சுயநலப்போர் புரியும் நாடுகள் மட்டுமின்றி, மொத்த மனித சமுதாயத்தையே நாச வினைகளுக்கு பொறுப்பேற்க வைக்கின்ற அறியாமை அரசியலின் சட்ட தீர்வுகளை ஆராய முறப்படுவதும் அதை மாற்ற முயற்சிப்பதும்தான் மதியாகும்.

பொருளாதார, அரசியல் சிக்கல்களை அறிவியல் மூலமாகவும், அறிவுடைய அரசியல்வாதிகளினால் தீர்வு காண முடியும். அத்துடன், அறிவியல் அழிவு சக்திகளை அரசியல் மற்றும் பொருளாதார சட்ட தீர்வுகளின் மூலமாக ஒடுக்கவும் முடியும்.

ஆக, தனிமனிதர்களை போலவே, சமூகங்களும், இனங்களும், நாடுகளும் கூட விதியின் பேரால் அடிமைப்பட்டிருக்கக் கூடும் அல்லது அடிமைப்படுத்த முடியும்.

அவ்வாறு, ஆங்கிலேயர்களினால் அடிமைகளாக இருந்தவர்கள்தான் நாமும் என்பதை, நாம் என்றுமே மறந்து விடக்கூடாது.

ஆக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், அடிப்படைக்கல்வித் திட்டங்கள், தகவல் தொழில்நுட்பங்கள், இயற்கை வளங்கள் குறைபாடுகள், சாதீய கோட்பாடுகள், மூட மத நம்பிக்கைகள் போன்ற காரண, காரணிகளை

உணராமல் செய்யும், செயல்கள் எல்லாமே மனித சமூகத்திற்கு தீய விதியை விளைவிக்கக்கூடும்.

உதாரணமாக, **ஆண்டான் - அடிமை** என்ற கோட்பாட்டினால், அனேக சிற்றரசர்களும், ஜமீந்தார்களும், திவான்களும் நம் சமூகத்தையும், சமூக பொருளாதாரத்தையும் சீரழித்த விளைவுகளையும், தீண்டாமை என்ற பெயரில் எத்தனையோ மனித உயிர்களை உதாசீனப்படுத்தியதையும் நியாயபடுத்தி, இந்தியாவின் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத்தரம் சீரிழந்து சின்னாபின்னமாகிப் போனதற்கும், அவர்கள் உரிமைகள் இழந்து, உயிர்வாழத் தகுதியற்று வீழ்ந்ததற்கும், “**விதி**” என்று எப்படி ஒதுக்கிவிட முடியும்....?

அதேசமயம், மதியின் பெயரால் ஆணவம் கொண்டு, அறிவியல், பொருளாதார சக்திகளின் மீது குருட்டு மோகம் கொண்டு, இந்த பிரபஞ்ச இயற்கை விதிகளை புரிந்துக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், அத்தகைய அதீத சக்திகளுடன் அதிகம் விளையாடுவதும் மிக ஆபத்தான வினைகளை உண்டாக்கி விடவும் வாய்ப்புகள் உள்ளன. ஆகவே, அதில் எச்சரிக்கை தேவை.

பொதுவாக, எல்லாமே விதிப்படிதான் நடக்கிறது. நம்மால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை! என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டால், மனிதனுக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.

மேலும், இந்த நிலைமையை ஏற்றுக்கொண்டால், மனிதன் தைரியமாகப் பாவங்கள் செய்வதில் ஈடுபடவும் செய்வான். ஏனெனில், குற்றம் செய்தவர்கள் எல்லாரும் விதியின்மேல் பழியைப் போட்டுவிட்டுத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

நம்முடைய சனாதன தர்மக் கோட்பாடுகளின்படி, நாமே முன்பு செய்த செயல்களின் விளைவுகள்தான், இப்போது நாம் அநுபவிக்கும் நன்மைகள் அல்லது தீமைகள் என்றும், அதில் **விதி** என்று ஒன்றும் கிடையாது என்றும், அதைத்தான் “**கர்மா**” அல்லது ‘**கர்ம வினை**’ என்றும் கூறுகின்றோம்.

அதாவது, நம்முடைய சாதனைகள் எல்லாம், நாம் முன்பு செய்த செயல்களின் விளைவே. ஆகவே நம் செயல்கள்தாம் நம்முடைய விதி எனப்படுவது. **(யோகவாசிஷ்டம்.)**

அதாவது, போன பிறவியில் நமக்கு அளிக்கப்பட்ட செயல் சுதந்தரத்தைச் சரியாகப் பயன்படுத்தாமல், தீய செயலில் ஈடுபட்டதன் விளைவுதான் இப்போது நமக்கு வாழ்க்கையில் கிடைக்கும் தோல்விகள், ஏமாற்றங்கள், வியாதிகள் எல்லாமே என்று கூறலாம்.

ஒருவன் விதியின் வலிமையால் ஒரு தீய காரியத்தைச் செய்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் விதிப்படிதான் நடக்கிறான் என்றால், அவன் எவ்வித மனத் தடுமாற்றமுமில்லாமல் அல்லவா அதைச் செய்ய வேண்டும்?

ஆனால், உண்மையில் நடப்பதென்ன?

இதயம் படபடவென்று அடித்துக்கொள்கிறது. 'இது தவறான காரியம்; செய்யாதே' என்று மனம் (மதி) தடுக்கிறது. மனச்சாட்சிக்குப் பணிந்து துணிவுடன் முயன்றால் அவன் அந்தத் தீய காரியத்தைச் செய்யாமல் தவிர்க்கலாம்.

யோகவாசிஷ்டம் அடித்துக் கூறுகிறது:- *"விதி என்பது நாம் முன் செய்த நல்ல அல்லது கெட்ட கர்மங்களின் பயனேயன்றி வேறொன்றுமில்லை. அறிவிலிதான் தன்னை விதியின் கைப்பாவை என்று எண்ணி அழிந்து போகிறான்."*

இதையேதான் **கர்மத்தின் நியதி** என்று நம் தர்மம் வலியுறுத்துகிறது.

"கர்மாவின் நியதியில் நம்பிக்கையுள்ளவன் தனக்குத்தானே தன் விதியை நிர்ணயித்துக் கொள்ள முடியும். அத்துடன், தன் எண்ணத்தையும் குணத்தையும் தானே உண்டாக்கிக் கொள்பவன் என்று தனக்கு நன்கு தெரியும்."

நம் தலையில் யாரோ ஒருவனோ அல்லது கடவுளோ எதையும் எழுதவில்லை.

ஏனெனில், கடவுள், ''**எல்லா உயிர்களிடத்தும் சமமானவர், அவருக்குப் பகைவனுமில்லை, நண்பனுமில்லை.**'' (கீதை 9 - 29.) உண்மையில், நாமே நம் தலையில் எழுதிக்கொண்டுள்ளோம்.

இது குருட்டு நம்பிக்கையல்ல. விஞ்ஞான ரீதியான ஒரு கருத்து.

ஒவ்வொரு செயலுக்கும் எதிர் வினை (செயல்) உண்டு. இது தவிர்க்க முடியாதது.



செய்த கர்மங்களுக்குப் பயன் வந்தே தீரும். இது விதவையின் கண்ணீருக்கோ, அநாதையின் அலறலுக்கோ செவி சாய்க்காது. இதுதான் அந்த **நியதி.** இதுவே **விதி.**

"ஒருவன் தானே தேர்ந்தெடுக்கப்பட்ட தன் குணாதிசயங்களுக்குத் தகுத்தாற்போலுள்ள சூழ்நிலையிலேயே வைக்கப்படுகிறான். தன்னாலேயே உண்டாக்கப்பட்ட உலகத்தில்தான் அவன் பிறக்கிறான்".

ஒருவன் தானே தனக்கு ஏற்படுத்திக்கொண்ட ஒன்றுதான் விதி என்று இதிலிருந்து தெரிகிறது. ஆகவே தன்னால் உண்டாக்கப்பட்ட ஒன்றைத் தானே முயன்றால் மாற்ற முடியும என்கிறது நமது சனாதன தர்மம்.

அதாவது, விதியை மதியால் வெல்லலாம் என்கிறது.

சரி! மதி என்றால் என்ன?

மதி என்றால் நம்முடைய "**மனம்**" என்று பொருள். இது அறிவின் மிக நுண்ணிய ஆற்றல் ஆகின்றது.

அத்துடன், இந்த மனம் பல்வேறு செயல் விளைவுகளின் பயனை பல மடங்கு திருப்பிக் கொடுக்கக்கூடிய வலிமை பொருந்தியது. அதாவது, விதையை விதைத்தவனுக்குத் தேவையான அறுவடைக் காலம் வரும்போது, அதைப் பல மடங்காகத் திருப்பிக் கொடுக்கக்கூடிய தன்மை பொருந்தியது.

இதை விஞ்ஞான ரீதியில் அணுகினாலும்கூட, அறியக்கூடிய பொருள் அறியப்பட்ட பொருளைவிட அதிக சக்தி வாய்ந்தது.

ஒருவன் தான் செய்த வினைகள்தான் தன்னை இந்த நிலைக்கு கொண்டு வருகின்றது என்பதை அறிய முடியுமனால், அவன் மறுபடியும் அதே சுழலில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்ள முடியும்.

ஆக, மனிதனின் தற்கால நிலைமைக்குக் காரணம், தனது நீண்ட காலத்துச் செய்கைகளின் செயல்பயன்கள் தான் என்பதை அறியும்பொழுது, அடுத்து வருகின்ற தற்போதைய செயல் விளைவுகளை அவன் அவசியம் மாற்றிக் கொள்ளவும் முடியும். அதற்காகத்தான் அவனுக்கு **மதி** கொடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன், அவனுடைய பழைய வாசனைகளும் அவனது தற்காலச் சுற்றமும், சூழ்நிலைகளும் அவனுக்கு இடையூறுகள் விளைவிக்கலாம்.

ஆனால், அவனுடைய நல்லுணர்வுக்கும், ஊக்கத்திற்கும் உண்டான விடாமுயற்சியின் மூலம், அந்த இடர்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிப்போன்று இருந்த இடம் தெரியாமல் காணாமல் போகும்.

அதாவது, அவனது வாழ்க்கை என்பது, என்றும் இடைவிடாதம் அவனது சுய உற்பத்தியே ஆகும்.

இதிலிருந்து நம் சனாதன தர்மம் நம்மை விதியின் அடிமை என்று என்றுமே கூறவில்லை. ஆனால், **அதன் வலிமை தன் வலிமையே** என்று நம்மை உணரச் சொல்கின்றது.

ஒருவன் போன ஜென்மத்தில் செய்த வினையின் செயல் விளைவுகள் தான் அவனது **விதி** என்கின்றது. அத்துடன் அவனே அவன் கால்களிலும், கைகளிலும் பலமான கட்டுகளை போட்டுக்கொண்டுள்ளான். அது, அவன் முயன்றால் மட்டுமே, அந்த கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு, விடுதலை பெற முடியும் என்கின்றது.

ஒருவன் தான் போட்டுக் கொண்ட கட்டுக்களை, தானே அகற்றாமல் வாழ்நாளெல்லாம் அவன் கத்திக் கதறினாலும், அதனால் ஒரு பயனுமில்லை.

ஆகவே, "நமது தற்கால நிலைமைக்கு, நாம் முன்பு செய்தவற்றின் விளைவுகள்தான் என்பதினால், நமது வாழ்க்கையை நாம் வேண்டுவதுப் போன்று, மாற்றி அமைத்துக்கொள்ள, நம்மிடம் உள்ள மதியை இப்போதுள்ள நிகழ்காலத்தில் உபயோகப்படுத்தி, நம்முடைய நிம்மதியான வாழ்க்கைக்கான வழியை நாம்தான் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

“**தீதும் நன்றும் பிறர்தர வாரா**!”


அதைவிடுத்து, கடந்தகாலம் பற்றியும், எதிர்காலம் பற்றியும் எப்போதும் எண்ணிக் கொண்டிருப்பது, இன்றைய நிகழ்காலத்தை நாம் தவற விட்டுக் கொண்டிருப்பதை அறிய முடியாத அவல நிலையைக் காட்டுகின்றது.

ஆகவே, அனைவரும் **விதியா? மதியா?** என்று வீணான விவாதங்களில் ஈடுபட்டுக்கொண்டு, இனிமையான நிகழ்காலத்தில் இனிதாக வாழத்தெரியாமல், அறியாமைகளில் அகப்பட்டுக் கொண்டு அல்லல்பட்டுக் கொண்டிருக்காமல், உயர் அறிவுப் பரிமாணத்தில் உள்ள நம் மதியைக் கொண்டு, இருமைகளை வென்று, இந்த **விதியும், மதியும்** நம்முடைய செயல் விளைவுகளால் விளைந்த வினைகள் என்பதை ஏற்றுக்கொண்டு, இனியாவது நாம் செய்யும் செயலில் ஒரு சிறப்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற விவேகம் வருவதே மதி படைத்தவனின் **இனிவரும் விதி செய்வோம்!** என்ற உத்வேகம் ஆகும்.

நன்றி!

ஓம் தத் ஸத்!

விதியும் மதியும்!



சுவாமி பிரபஞ்சநாதன்